**தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், (தாட்கோ)**

**தேனாம்பேட்டை, சென்னை -18**

**குறுகிய கால e-ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 05/2025 - 2026, நாள்.01.09.2025**

**I) விழுக்காடு மொத்த ஒப்பந்த வகை - 02 பணிகள்**

**II) இரு உறை ஒப்பந்த வகை - 05 பணிகள்**

**மொத்தம் - 07 பணிகள்**

**தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் இணைய வழியாக மட்டும் விழுக்காடு மொத்த ஒப்பந்த வகை 18.09.2025 பிற்பகல் 03.00 மணிவரை மற்றும் இரு உறை ஒப்பந்த வகை 25.09.2025 பிற்பகல் 03.00 மணிவரை தாட்கோவில், 2025-2026 ஆம் ஆண்டில் தகுந்த வகுப்பில் பதிவு பெற்ற மற்றும் புதுப்பித்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.**

**(https://tender.tahdco.com)**

| வ. எண் | பணிகளின் விவரம் | | பணி விவரம் | பணி முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் | முன் வைப்புதொகை (ரூபாய்) | ஒப்பந்ததாரர் பதிவு விவரம் |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் | இடம் | | | | |
| **விழுக்காடு மொத்த ஒப்பந்த வகை - 02 பணிகள்** | | | | | | |
| **பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல் - (முதல் அழைப்பு) - 02 பணிகள்** | | | | | | |
| 1 | கள்ளக்குறிச்சி | கிளாக்காடு மேல்நிலைப் பள்ளி | 4 வகுப்பறை, 2 அறிவியல் ஆய்வுக்கூடம், 1 கழிவறைக் கூடம் | 7 மாதம் | 106724 | நான்காம் வகுப்பும் அதற்கு மேலும் |
| 2 | தருமபுரி | மன்னூர் உயர்நிலைப் பள்ளி | 2 வகுப்பறை, 1 அறிவியல் ஆய்வுக்கூடம், 2 கழிவறைக் கூடம் | 5 மாதம் | 75817 | நான்காம் வகுப்பும் அதற்கு மேலும் |

<table>
<tr><th colspan="4">கோட்டம் வாரியாக பணிகளின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>வ.எண்: 1</td><td colspan="2">செயற்பொறியாளர், தாட்கோ, விழுப்புரம்</td><td>1</td></tr>
<tr><td>வ.எண்: 2</td><td colspan="2">செயற்பொறியாளர், தாட்கோ, சேலம்</td><td>1</td></tr>
<tr><td colspan="3">மொத்தம்</td><td>2</td></tr>
<tr><td colspan="4">ஒப்பந்தப்புள்ளி படிவம் கிடைக்குமிடம் : https://tender.tahdco.com<br>(through online Portal)</td></tr>
<tr><td>ஒப்பந்தப்புள்ளி படிவம் கிடைக்கப்பெறும் காலவரையறை :<br>(இணைய வழியாக மட்டுமே)</td><td colspan="2">04.09.2025<br>முதல்<br>18.09.2025 வரை</td><td>பிற்பகல் 03.00 மணி வரை</td></tr>
<tr><td>முன் அறிவிப்பு கூட்டம் (Contractor Pre Bid Meeting)</td><td colspan="3">11.09.2025<br>(முற்பகல் 11.00 மணி)</td></tr>
<tr><td>ஒப்பந்தப்புள்ளி இணைய வழியாக மட்டும் சமர்ப்பிக்க வேண்டிய நாள்:</td><td colspan="3">04.09.2025 முதல் 18.09.2025<br>(பிற்பகல் 03.00 மணி வரை)<br>(As per server system Clock)</td></tr>
<tr><td>முன் வைப்பு தொகை செலுத்தப்படும் விவரம் (EMD):</td><td colspan="3">முன் வைப்பு தொகையினை தாட்கோ வங்கி கணக்கில் செலுத்தி வங்கி ரசீதை இணைய வழியாக ஒப்பந்தபுள்ளியுடன் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.</td></tr>
<tr><td>e-ஒப்பந்தப்புள்ளிகள் இணைய வழியாக பரிசீலிக்கப்படும் தேதி.</td><td colspan="2">19.09.2025</td><td>முற்பகல் 11.00 மணியளவில்</td></tr>
</table>

| வ. எண் | பணிகளின் விவரம் | | பணி விவரம் | பணி முடிக்க நிர்ணயிக் கப்பட்ட காலம் | முன் வைப்புதொகை (ரூபாய்) | ஒப்பந்ததாரர் பதிவு விவரம் |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் | இடம் | | | | |
| **இரு உறை ஒப்பந்த வகை - 05 பணிகள்** | | | | | | |
| **பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல் - (முதல் அழைப்பு) - 05 பணிகள்** | | | | | | |
| 3 | கள்ளக்குறிச்சி | பாச்சேரி மேல்நிலைப்பள்ளி | 6 வகுப்பறை, 3 அறிவியல் ஆய்வுக்கூடம், 1 கழிவறைக் கூடம் | 8 மாதம் | 144373 | மூன்றாம் வகுப்பும் அதற்கு மேலும் |
| 4 | தருமபுரி | கலசப்பாடி மேல்நிலைப்பள்ளி | 7 வகுப்பறை, 3 அறிவியல் ஆய்வுக்கூடம் | 8 மாதம் | 147230 | மூன்றாம் வகுப்பும் அதற்கு மேலும் |
| 5 | சேலம் | ஓடை காட்டுப்புதூர் மேல்நிலைப்பள்ளி | 7 வகுப்பறை, 2 அறிவியல் ஆய்வுக்கூடம், 2 கழிவறைக் கூடம் | 11 மாதம் | 146734 | மூன்றாம் வகுப்பும் அதற்கு மேலும் |
| 6 | ஈரோடு | தலமலை மேல்நிலைப்பள்ளி | 4 வகுப்பறை, 3 அறிவியல் ஆய்வுக்கூடம், 1 கழிவறைக் கூடம் | 8 மாதம் | 131899 | மூன்றாம் வகுப்பும் அதற்கு மேலும் |
| 7 | நீலகிரி | தேவாலா மேல்நிலைப்பள்ளி | 6 வகுப்பறை, 4 அறிவியல் ஆய்வுக்கூடம், 1 கழிவறைக் கூடம் | 11 மாதம் | 173071 | மூன்றாம் வகுப்பும் அதற்கு மேலும் |

| கோட்டம் வாரியாக பணிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|
| வ.எண்: 3 | செயற்பொறியாளர், தாட்கோ, விழுப்புரம் | 1 |
| வ.எண்: 4, 5 | செயற்பொறியாளர், தாட்கோ, சேலம் | 2 |
| வ.எண்: 6, 7 | செயற்பொறியாளர், தாட்கோ, கோயம்புத்தூர் | 2 |
| **மொத்தம்** | | **5** |

| | | |
|---|---|---|
| ஒப்பந்தப்புள்ளி படிவம் கிடைக்குமிடம் : **https://tender.tahdco.com** | | |
| ஒப்பந்தப்புள்ளி படிவம் கிடைக்கப்பெறும் காலவரையறை : **(இணைய வழியாக மட்டுமே)** | 04.09.2025 **முதல்** 25.09.2025 **வரை** | **பிற்பகல் 03.00 மணி வரை** |
| முன் அறிவிப்பு கூட்டம் (Contractor Pre Bid Meeting) | **11.09.2025 (முற்பகல் 11.00 மணி)** | |
| ஒப்பந்தப்புள்ளி இணைய வழியாக மட்டும் சமர்ப்பிக்க வேண்டிய நாள்: | **04.09.2025 முதல் 25.09.2025 (பிற்பகல் 03.00 மணி வரை)** (As per server system Clock) | |
| முன் வைப்பு தொகை செலுத்தப்படும் விவரம் (EMD): | **முன் வைப்பு தொகையினை தாட்கோ வங்கி கணக்கில் செலுத்தி வங்கி ரசீதை இணைய வழியாக ஒப்பந்தபுள்ளியுடன் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.** | |
| **e-ஒப்பந்தப்புள்ளிகள் இணைய வழியாக பரிசீலிக்கப்படும் தேதி.** | 26.09.2025 | **முற்பகல் 11.00 மணியளவில்** |

**மேலாண்மை இயக்குநர்**

## தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ)

## தேனாம்பேட்டை, சென்னை-18

## குறுகிய கால- e-ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 05/2025-26/நாள். 01.09.2025

## விழுக்காடு மொத்த ஒப்பந்த வகை (Single Cover) - 02 பணிகள்

## இரு உறை ஒப்பந்த வகை (Two Cover) - 05 பணிகள்

## மொத்தம் – 07 பணிகள்

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் சார்பில் 02 விழுக்காடு மொத்த ஒப்பந்த வகை (Single Cover) பணிகளும், 05 இரு உறை ஒப்பந்த வகை (Two Cover) பணிகள் என மொத்தம் 07 பணிகளுக்கு 2025-2026 ஆம் ஆண்டின் தாட்கோவில் தகுந்த வகுப்பில் பதிவு / புதுப்பித்தல் நிலையில் உள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் இணைய வழியாக மட்டும் **விழுக்காடு மொத்த ஒப்பந்த வகை (Single Cover) 18.09.2025 03 மணி வரை, மற்றும் இரு உறை ஒப்பந்த வகை (Two Cover) 25.09.2025 03.00 மணி வரை** (As per Server System Clock) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்படி இணைய வழியாக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் **விழுக்காடு மொத்த ஒப்பந்த வகை பணிகள் 19.09.2025 காலை 11.00 மணியளவிலும் மற்றும் இரு உறை ஒப்பந்த வகை பணிகள் 26.09.2025 காலை 11.00 மணியளவில்** (As per Server System Clock) பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

1. இவ்ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் தாட்கோவில் பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்ததாரர்களும் திருத்தப்பட்ட பணமதிப்பு மற்றும் செல்நிலைச்சான்று வழிமுறைகளின்படி மீள் பதிவு மற்றும் புதுப்பித்து உரிய தலைமைப் பொறியாளர் அல்லது செயற்பொறியாளர் சான்று பெற்று ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் இணைய வழியாக (https://tender.tahdco.com) மட்டுமே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

3. நிருவாக காரணங்களுக்காக பெறப்பட்ட அனைத்து இணைய வழி ஒப்பந்தப்புள்ளிகளையும் அல்லது குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை எவ்வித காரணமும் குறிப்பிடாமல் இரத்து செய்ய தாட்கோ, மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

4. மேலும் GST நடைமுறையில் அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற GST சதவீதத்திற்கு ஏற்றவாறு பணிகள் நிறைவு பெற்றபின் பட்டியல் விடுவிக்கப்படும்.

5. முன் வைப்புத் தொகையை (EMD) கீழ்வருமாறு தாட்கோ வங்கி கணக்கில் செலுத்தி அதன் ரசீதை இணைய வழியாக ஒப்பந்தப்புள்ளியுடன் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு முன்வைப்புத் தொகையை வங்கி கணக்கில் **விழுக்காடு மொத்த ஒப்பந்த வகை பணிகள் (Single Cover) 18.09.2025 03.00 மணி வரை, மற்றும் இரு உறை ஒப்பந்த வகை பணிகளுக்கு (Two Cover) 25.09.2025 அன்று மாலை 03.00 மணிக்குள் செலுத்தாத பட்சத்தில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி முற்றிலும் நிராகரிக்கப்படும்.**

6. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகையினை (Departmental Value) விட (-) 5% முதல் (-)14.99% விழுக்காடு வரை குறைவாக குறிப்பிட்டிருப்பின், கூடுதல் காப்பீட்டுத் தொகையாக 2% சதவீதத்தை ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள தொகைக்கு (Department Value) தாட்கோ வங்கி கணக்கில் கீழ்வருமாறு செலுத்தி அதன் ரசீதை இணைய வழியாக ஒப்பந்தப்புள்ளியுடன் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு கூடுதல் காப்பீட்டுத் தொகையை வங்கி கணக்கில் **விழுக்காடு மொத்த ஒப்பந்த வகை பணிகள் (Single Cover) 18.09.2025 03.00 மணி வரை, மற்றும் இரு உறை ஒப்பந்த வகை பணிகளுக்கு (Two Cover) 25.09.2025 அன்று மாலை 03.00 மணிக்குள் செலுத்தாத பட்சத்தில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி முற்றிலும் நிராகரிக்கப்படும்.**

7. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகையினை (Departmental Value) விட (-)15% விழுக்காடு மற்றும் அதற்கும் குறைவாக குறிப்பிட்டிருப்பின் கூடுதல் காப்பீட்டுத் தொகையாக 50% வித்தியாசத் தொகை (Departmental Value மற்றும் Quoted Value of tenderer) கணக்கிட்டு கூடுதல் காப்பீட்டுத் தொகையை கீழ்வருமாறு தாட்கோ வங்கி கணக்கில் செலுத்தி அதன் ரசீதை இணைய வழியாக ஒப்பந்தப்புள்ளியுடன் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு கூடுதல் காப்பீட்டுத் தொகையை கீழ் வருமாறு வங்கி கணக்கில் **விழுக்காடு மொத்த ஒப்பந்த வகை பணிகள் (Single Cover) 18.09.2025 03.00 மணி வரை, மற்றும் இரு உறை ஒப்பந்த வகை பணிகளுக்கு (Two Cover) 25.09.2025 அன்று மாலை 03.00 மணிக்குள் செலுத்தாத பட்சத்தில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி முற்றிலும் நிராகரிக்கப்படும்.**

குறிப்பு: (EMD) முன் வைப்புத் தொகை (ASD) கூடுதல் பாதுகாப்புத் தொகை ஆகியவை **கீழ்வருமாறு வங்கி கணக்கில் செலுத்த வேண்டும்.**

<u>வங்கி :</u> IOB, சென்னை, IFSC No: IOBA0002051

TAHDCOEMD0500561730 (மாதிரி)

--- ----- -------------

1 2 3

இந்த முறையில் செலுத்தப்பட வேண்டும்.

<u>குறிப்பு:</u>

(1). ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் e-05 இரண்டு இலக்கத்தில் – (05)

(2). ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் பணியின் வரிசை எண் மூன்று இலக்கத்தில் – (005)

(3). ஒப்பந்ததாரரின் தனி அடையாள எண் ஐந்து இலக்கத்தில் – (ID No. 61730)

மேற்படி முறையில் செலுத்தாத EMD, ASD ஆகிய ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

8. ஒப்பந்ததாரர் சமர்ப்பிக்கும் அனைத்து ஆவணங்களுடைய சுருக்கத்தினை (Abstract) ஒரு பக்கத்தில் குறிப்பிட்டு சுயசான்று கையொப்பம் (Self attestation with declaration) இட்டு இணைய வழியாக (PDF format) மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

9. மேற்காணும் நிபந்தனைகளுடன் கூடுதலாக ஒப்பந்ததாரரின் பணித்திறன், பணியாளர்கள், நிருவாக கட்டமைப்பு, தளவாடப் பொருட்கள், கட்டுமானப் பணிக்கு உட்படுத்தப்படும் இயந்திரங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் ஆவணங்களை பணிக்கேற்றவாறு இணைய வழியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

10. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் தற்போது செய்து வரும் பணிகளின் விவரத்தினை (On Going Works) e- ஒப்பந்தப்புள்ளியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

11. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியில் விலையினை குறிப்பிடுவதற்கு முன்னர் கட்டுமானத்திற்கு தேவைப்படும் பொருட்களின் தேவையான அளவு மற்றும் அவற்றின் கிடைக்குமிடம் மற்றும் பணித்தலம் ஆகியவற்றினை தவறாமல் உறுதி செய்த பின்னர் தான் இணைய வழி ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்க வேண்டும். மேலும் இது ஒப்பந்ததாரரின் முழு பொறுப்பாகும்.

12. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளும் அலுவலர் (Tender Accepting Authority அவர்களால் சம்மந்தப்பட்ட கோட்டத்தில் 2025-2026 ஆம் ஆண்டில் தகுந்த வகுப்பில் பதிவு / புதுப்பித்தல் நிலையில் உள்ள ஒப்பந்ததாரர்களுடன் **விழுக்காடு மொத்த ஒப்பந்த வகை பணிகளும் (Single Cover)) மற்றும் இரு உறை ஒப்பந்த வகை பணிகளுக்கு (Two Cover) 11.09.2025 தேதியன்று காலை 11.00 மணியளவிலும்** Pre-Bid Meeting கூட்டம் நடத்தப்படும்.

13. மேலாண்மை இயக்குநர் தாட்கோ சென்னை அவர்களால் 10.01.2025 மற்றும் 12.03.2025 ஆகிய இரு தினங்களில், பணிகளின் ஒப்பந்த காலம் கடந்து தாமதமாக செய்து வரும்

ஒப்பந்ததாரர்களுடன் சிறப்பு கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டு, பல அறிவுரைகள் வழங்கப்பட்டு பணிகளை முடிக்க காலகெடு நிர்ணயம் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் தற்போது பணிகளை முடிக்காத ஒப்பந்ததாரர்களும் மற்றும் கீழ்வரும் நிலையில் உள்ள ஒப்பந்ததாரர்களும் இவ்ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள இயலாது. மேற்படி இனங்களின் பட்டியல் தயார் செய்யப்பட்டு தலைமை அலுவலகம் மற்றும் சம்மந்தப்பட்ட கோட்ட அலுவலகங்களில் தகவல் பலகையில் வெளியிடப்பட்டுள்ளது.

(அ). ஒப்பந்ததாரர் இரண்டு மற்றும் அதற்கு மேலும் எண்ணிக்கையில் கட்டுமான பணிகள் (விடுதிகள் பராமரிப்பு குடியிருப்பு பராமரிப்பு பணிகள் நீங்கலாக) தற்போது செய்து கொண்டிருந்தாலும் (அல்லது) நிலுவையில் வைத்திருந்தாலும் ஒப்பந்ததாரர் இந்த ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ள இயலாது.

(ஆ). ஒரு பணி மட்டும் தற்போது செய்து கொண்டிருந்தாலும் மேற்படி பணி ஒப்பந்த காலத்தை விட கூடுதலாக காலதாமதமாக செய்து கொண்டிருக்கும் ஒப்பந்ததாரர்களும் இந்த ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்ள இயலாது. (Beyond Agreement period)

(இ). ஒப்பந்ததாரர்களின் ஏதேனும் ஒரு பணிக்கான ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டிருப்பின், ரத்து செய்யப்பட்டபின் அடுத்து வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அழைப்பில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.

14. ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் உள்ள பணிகளில் ஒரு ஒப்பந்ததாரர் பல பணிகளில் பங்கேற்று அவற்றில் இரண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட பணிகளுக்கு குறைவு ஒப்பந்ததாரராக (Lowest Tenderer) வரபெற்றாலும், இரண்டு பணிகள் மட்டுமே பணி ஆணை வழங்கப்படும். மேலும் ஒப்பந்ததாரர் தன் வசம் உள்ள பணியும் சேர்ந்து இந்த ஒப்பந்தப்புள்ளில் பங்கேற்று, பணி ஆணை பெறும் பணியும் சேர்ந்து இரண்டு பணிக்கு மேல் வழங்கப்பட மாட்டாது.

15. ஒப்பந்தப்புள்ளி பட்டியலில் உள்ள பணிகளுக்கு, ஒரு பணிக்கு பல ஒப்பந்ததாரர்கள் ஒரே விலைவிகித்தில் பங்கேற்றிருப்பின் அவர்களிடமிருந்து விலைகுறைப்பு (Negotiation) செய்து தர கோரப்படும். விலை குறைப்புக்கு பின்னரும் ஒரே விலை விகிதம் இருப்பின் குலுக்கல் முறையில் ஒப்பந்ததாரர் இறுதி செய்யப்படுவர்.

16. ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் பங்கேற்று தகுதி பெற்ற ஒப்பந்ததாரர் உடன்படிக்கை மேற்கொண்ட பின்பு தன்வசம் கிடைக்கப்பெற்ற பணிகள் அனைத்தும் காலதாமதமின்றி ஒரே நேரத்தில் ஆரம்பித்து உடன்படிக்கை காலத்திற்குள் முடிக்க வேண்டும். இல்லையெனில் அவர்களின் ஒப்பந்தம் எக்காரணமுமின்றி இரத்து செய்யப்படும்.

17. இரு உறை ஒப்பந்த வகை (வ. எண்:03 முதல் 07 வரை) கட்டாய நிபந்தனைகள்: (05 பணிகள்)

(Two Cover Mandatory Eligibility Condition)

(அ). Annual Turn Over (ஆண்டு வருடாந்திர நிதி பரிவர்த்தனை)

கடந்த ஐந்து ஆண்டுகளில், ஏதேனும் ஒரு ஆண்டின் வருடாந்திர நிதி பரிவர்த்தனை (Annual Financial Turn Over) ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பணியின் மதிப்பிற்கு 50% குறையாமல் அரசு அல்லது அரசு சார் நிறுவனங்களில் பணிகள் மேற்கொண்டு இருத்தல் வேண்டும். இது தொடர்பான ஆவணங்கள் / சான்றிதழ்கள் உரிய அலுவலரிடம் பெறப்பட்டு இணைய வழியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ). முன் அனுபவம் (Experience)

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏதேனும் ஒரு ஆண்டில் கீழ்காணும் வகையில் பணிகள் மேற்கொண்டு முடிவுற்ற அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஒரு கட்டடப் பணியானது, குறைந்தபட்சம் 50% சதவீதம் ஒப்பந்தப்புள்ளியில் கோரப்படும் பணியின் தொகை மதிப்பில் ஒற்றை உடன்படிக்கையில் (GST நீங்கலாக) அரசு அல்லது அரசு சார் நிறுவனங்களின் கீழ் நல்ல முறையில் செய்து

முடித்திருத்தல் வேண்டும். இது சம்மந்தமாக உரிய அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்களை / ஆவணங்களை இணைய வழியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(அல்லது)

கடந்த ஐந்து ஆண்டுகளில், ஏதேனும் ஒரு ஆண்டில் இரண்டு கட்டடப் பணிகளின் அதன் இரண்டு உடன்படிக்கையின் கூட்டு மதிப்பீடு 50% சதவீதத் தொகை ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பணியின் மதிப்பிட்டிற்கு குறையாமல் (GST நீங்கலாக) அரசு அல்லது அரசு சார் நிறுவனங்களின் கீழ் நல்ல முறையில் செய்து முடித்திருத்தல் வேண்டும். இது சம்மந்தமாக உரிய அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்களை / ஆவணங்களை இணைய வழியாக மட்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

18. இணைய வழியாக ஒப்பந்தப்புள்ளி திறந்த பின்னர் ஏழு தினங்களுக்குள் பணி உத்தரவு ஆணை வழங்கப்படும். மேலும் பணி உத்தரவு ஆணை வழங்கப்பட்டதிலிருந்து ஏழு தினங்களுக்குள் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அன்றே பணித்தலம் ஏற்கப்பட வேண்டும்.

மேற்படி பணித்தலம் ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து 15 தினங்களில் பணியானது துவங்கப்பட வேண்டும். அதற்கும் மேற்பட்டு ஏழு தினங்களில் பணியினை துவங்காமல் இருப்பின் ஒப்பந்தம் எக்காரணமுமின்றி இரத்து செய்யப்படும்.

Note:- In case of any changes / corrections / amendments/ corrigendum in the Tender notice, it will be intimated in the website only. (www.tahdco.com)

இணைப்பு: பணிகளின் விவர அட்டவணை.

மேலாண்மை இயக்குநர்

01/4/25

பெறுநர்.

தாட்கோ ஒப்பந்ததாரர்கள் (தொடர்புடைய கோட்டங்களின் மூலமாக)

**நகல்** :

1). மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

2).தலைவர், தாட்கோ, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக.

3).அரசு செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, தலைமைச்செயலகம், சென்னை - 9 அவர்களுக்கு தகவலுக்காக

4).இயக்குநர், ஆதி திராவிடர் நல இயக்குநரகம், சென்னை - 5 அவர்களுக்கு தகவலுக்காக.

5).மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக.

6), இயக்குநர், பழங்குடியினர் நலத் துறை, சென்னை - 5 அவர்களுக்கு தகவலுக்காக.

7). பொது மேலாளர் (நிர்வாகம்) தாட்கோ, தலைமையகம், சென்னை - 18 அவர்களுக்கு தகவலுக்காக.

8).பொது மேலாளர் (வளர்ச்சி) தாட்கோ, தலைமையகம், சென்னை - 18 அவர்களுக்கு தகவலுக்காக.

9). நிதி ஆலோசகர் (ம) தலைமை கணக்கு அலுவலர், தாட்கோ அவர்களுக்கு தகவலுக்காக.

10).அனைத்துக் கோட்ட செயற்பொறியாளர்கள்.

11).அறிவிப்புப் பலகைக்கு